# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 13.09.2019**

**முன்னிலை**

**திரு.இரா.தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7473/SCIC/2018**

திரு அ. ஆதவன் (எ) ஆறுமுகம் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்,
ஈரோடு.

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்,
பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்,
குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்.

பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கில் இவ்வாணையத்தால் இன்று (13.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுத திரு அ. ஆதவன் (எ) ஆறுமுகம் ஆஜரானார். பொது அதிகார அமைப்புகளின் சார்பாக திரு மு. மலையாள பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஈரோடு, திரு ம. சரவணகுமார், பொ தகவல் அலுவலர் / மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், பெருந்துறை, ஈரோடு மாவட்டம் மற் திருமதி த. ஜெயலட்சுமி, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், குமாரபாளை நாமக்கல் மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் ஈரோடு, பவானி, குமாரபாளை திருச்செங்கோடு வட்டங்களில் இன்றைய தேதியில் இயங்கிகொண்டிருக்கும் தோல், சாய தொழிற்சாலை

மற்றும் பிற தொழிற்சாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரி, தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் எந்தெந்த புலஎண்களில் தேங்கியுள்ளது, அதுதொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பாக 9 இனங்களில் தகவல்கள் கோரி தமிழ்நாடு மாசுக்கப்பட்டுப்பாட்டு வாரியம், கிண்டி, சென்னை என்ற முகவரிக்கு விண்ணப்பித்துள்ளார். இதற்கு 06.07.2018 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரரின் மனு பிரிவு 6(3)ன் கீழ் ஈரோடு, பெருந்துறை மற்றும் குமாரபாளையம் ஆகிய பகுதிகளின் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கு மனுதாரர் கோரும் தகவல்களை வழங்குமாறு அறிவுறுத்தி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய ஈரோடு, பெருந்துறை மற்றும் குமாரபாளையம் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களும் 27.07.2018 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரரின் 1,4,5,7 ஆகிய இனங்களுக்கான தகவல்களை வழங்கியுள்ளனர். மீதமுள்ள 2,3,6,8,9 இனங்களுக்கான தகவல்கள் சேகரித்து வழங்கக்கூடியவைகளாக இருப்பதாக தெரிவித்து அவற்றை வழங்க இயலவில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பதிலில் திருப்தியடையாத மனுதாரர் 21.08.2018 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி தான்கோரிய தகவல்களை தனக்கு பெற்று வழங்குமாறு தெரிவித்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையே மேல்முறையீட்டு அலுவலர் தெரிவித்துள்ள நிலையில் 08.10.2018 தேதியிட்டு மனுதாரர் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை அனுப்பியுள்ளார். அதன்பேரில் இவ்வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

3. இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் அளித்த பதில்களை பார்வையிடுகையில் ஈரோடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அலுவலகக் கட்டுப்பாட்டில் 1297 தொழிற்சாலைகளும், பெருந்துறை அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் 1130 தொழிற்சாலைகளும், குமாரபாளையம் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் 936 தொழிற்சாலைகளும் இயங்கிவரும் நிலையில் இதுதொடர்பான தகவல்களை மனுதாரர் ஒரே தகவல் பெறும் உரிமைச்சட்ட மனுவில் கேட்டு பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டுவாரியம், கிண்டி அலுவலகத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இதுதொடர்பாக கீழ்கண்ட உச்சநீதிமன்ற தீர்ப்பு மனுதாரருக்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

**“மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் அளவுக்கதிகமானதெனவும் அத்தகவல்களை சேகரிப்பது மற்றும் தொகுப்பது எனும் பணியானது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 7(9)ல் குறிப்பிட்டுள்ளவாறு பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை உரிய விகிதத்தில் அல்லாது திசைதிருப்புவதாக அமையுமெனவும் இவ்வாணையம் கருதுகிறது**

**தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் தோற்றுரை / முகப்புரையிலேயே (Preamble), வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை ஆகியவற்றுடன் அரசின் செம்மையான செயல்பாடு மற்றும் அளவாகவுள்ள நிதி ஆதாரங்களைத் திறம்பட பயன்படுத்துவது முதலிய மற்ற பொது நலன்களும் கருத்தில் கொண்டு இரு நோக்கங்களும் இணக்கமாக நிறைவேற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது**

**Civil Appeal No.6454 of 2011 மத்திய பள்ளி வாரியம் மற்றும் ஆதித்ய பந்தோபாத்யாய (Central Board of Secondary Education Vs. Aditya Bandopadhyay) என்ற வழக்கில் மாண்பமை உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பகுத்தறியா மற்றும் சாத்தியமற்ற பல்வேறு வகைப்பட்ட தகவல்களுக்கான கோரிக்கைகளை முன்வைத்தல் அல்லது அளிக்க உத்திரவிடுதல், அரசு யந்திரம் தகவல்களை சேகரிப்பதிலும் வழங்குவதிலும் மட்டும் மூழ்கி ஆக்க பூர்வ செயல்களை புறக்கணிக்கும் நிலைக்கு தள்ளப்படும் என்பதை தெளிவுபடுத்தியுள்ளது**

**எனவே மனுதாரர் கோரும் வகையான தகவல்களை சேகரித்து வழங்குவது வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை மேம்படுத்தவோ, ஊழலை அகற்றவோ உதவக்கூடிய வகையில் அமையவில்லை என இவ்வாணையம் கருதுகிறது.”**

4. இருப்பினும் சம்மந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர்கள் மனுதாரர் கோரிய இனங்கள் 1,4,5,7 ஆகியவற்றிற்கு உரிய தகவல்களை அளித்துள்ளார்கள். மீதமுள்ள 2,3,6,8,9 ஆகியவற்றிற்கு தகவல்களை சேகரித்து வழங்குவது என்பது இயலாத காரியம் என்பதைக் குறிப்பிட்டு , மனுதாரர் கோரும் தொழிற்சாலைகள் குறித்த தகவல்கள் ஆவணங்களில் இருக்கும் பட்சம் அவற்றை வழங்குவது என்பது

முறையானது என்றும் தெரிவித்துள்ளனர். இன்றைய விசாரணையின் போது மனுதாரர் இனங்கள் 8,9,க்கான தகவல்களையாவது தனக்கு பெற்றுத்தருமாறு கோரினார். மேற்சொன்ன 8,9 இனங்களுக்கான தகவல்களை நாம் பார்வையிடுகையில் ஈரோடு, பெருந்துறை, குமாரபாளையம் ஆகிய பகுதிகளில் காவிரி ஆற்றை ஒட்டியவாறு அமைந்துள்ள தொழிற்சாலைகளின் விவரங்களைக் கேட்டுள்ளார். மேற்சொன்ன விவரங்களை ஒவ்வொரு தொழிற்சாலை சம்மந்தப்பட்ட கோப்பினையும் எடுத்துப்பார்த்து பதில் அளிக்க வேண்டும். அவ்வாறு கோருவது தகவல் பெறும் உரிமைச்சட்ட வரையறைக்குள் வராது என்பதை ஆணையம் சுட்டிக்காட்டுகிறது. இருப்பினும் மனுதாரர் தனக்கு அல்லாமல் தன் பகுதிவாழ் மக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்வதற்காகவே தகவல்கள் கோருவதாகத் தெரிவித்தன் அடிப்படையில் மனுதாரர் குறிப்பிட்டு எந்தவிதமான தொழிற்சாலைகள் சம்மந்தமான தகவல்கள் தனக்கு தேவை என்பதைக் குறிப்பிட்டுக்கூறும் பட்சம் அது தொடர்பாக தகவல்களை சம்மந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலருக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம் என்பதை மனுதாரருக்கு ஆணையம் சுட்டிக்காட்டி இவ்வழக்கில் பொதுத் தகவல் அலுவலர்கள் தங்கள்வசம் உள்ள தகவல்கள் அனைத்தும் ஏற்கனவே மனுதாரருக்கு வழங்கிய நிலையில் இதில் மேல்விசாரணை தேவையில்லையென்று கருதி இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையை ஆணையம் முடித்துக்கொள்கிறது.

**ஒம்/-(ஆர். தட்சிணாமூர்த்தி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7473/SCIC/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்,
பிளாட் நெ.815,
சிட்கோதொழிற்பேட்டை, கல்யாணசுந்தரம் தெரு,
சென்னிமலை ரோடு, ஈரோடு - 638 009

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்,
பிளாட் எண். ஜெ2 (டபிள்யூ),
சிப்காட் தொழில் வளர்ச்சி மையம்,
பெருந்துறை 638 052, ஈரோடு மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்,
1-8/8, பெரியார் நகர்,
ராஜம் தியேட்டர் ரோடு, ஓலப்பாளையம்,
குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்.

<u>**மனுதாரர்**</u>
திரு அ. ஆதவன் (எ) ஆறுமுகம்,
3/15, வடிவேல் லைன், வாய்க்கால் காடு,
பள்ளிப்பாளையம் அக்ரஹாரம் (அஞ்சல்),
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் 638 008

*TK/PA 17.09.2019*